## கடற்கரை கவியரங்கு– 651

நாள்: **06-07-2025**

# மனமே! மனமே! கலங்காதே!

விதியென்று எந்நாளும் வெந்து மனம் நோகாதே!
கதியென்று வாழ்வியலை எண்ணி மனம் மூடாதே!
சதிசெய்து பலர் இங்கே புனைக்கதைகள் செய்வித்தார்!
மதிகொண்டு போராடு மரணத்தையும் வென்றிடலாம்!

மனம் ஒன்றே வாழ்வியலின் மாறாத அணிகலனாம்!
சினம்கொண்டு மனத்தை எந்நாளும் நிரப்பாதே!
தனம்தேடி வாழ்நாளை முழுதும் சிதைக்காதே!
மனம் கொள்ளும் முயற்சியதே வாழ்வில் வெற்றிதரும்!

மந்தமென்று அறிவு தன்னில் மனம் கொண்டு புலம்பாதே!
சிந்தை கொண்டு செயல்பட்டால் சிகரத்தில் நாம் இருப்போம்!
மந்தைக்கூட்டம் புனைந்தகதை மனத்தைச் சிதைத்திடுமே!
சொந்தமாக நம் அறிவால் சீர்தூக்கிப் பார்த்திடுவோம்!

தந்திரம் சேர் வாழ்வியலும் தரம் இன்றி செய்திடுமே!
எந்திரம் போல் வாழ்வார்தாம் எதனில் நிலை கொள்வார்!
பந்தமும் பகையும் தனிப்பார்வைக்கு ஒன்றாகும்!
சொந்தங்கள் நிழலாட சொத்து தான் கைகொடுக்கும்!

எந்திரம் போல் எந்நாளும்நீ வாழ்ந்திடாதே!
எண் திசையும் இறைவடிவம் என்பதையும் அறிந்திடுக!
கண்ணிமையைக் காப்பதுபோல் காக்கும் பரம்பொருளே!
திண்ணமாய் அறிவைச் செய்தால் தேவையில்லை கூக்குரலே!

வண்ணமாம் வாழ்க்கையிதை வாழ்ந்தே மகிழ்ந்திடுவோம்!
எண்ணமே வாழ்க்கை என்று எழுதி வைத்து மனம் தெளிவோம்!
கண் நிகர்த்த காட்சி எல்லாம் கடவுளின் வடிவமேயாம்!
எண்ணுக எண்ணுக யாவிலும் இன்பம் கொண்டு வாழ எண்ணுக!

- **கவிஞர் கவிவளவன்** ஆகிய
**கு.ப. அசோகன். 06-07-2025**
(மாலை 3. 05)